Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, செப்டம்பர் 12, 2026 | இதழ் 152

# அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியானது தவெக: விசில் சின்னத்துக்கு அங்கீகாரம்

சென்னை, 12 செப்டம்பர் 2026: தமிழ்நாட்டில் 7வது மாநில கட்சியாக தவெகவை இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது. அதேபோல், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மேலும், விசில் சின்னத்தையும் தவெகவின் சின்னமாக அங்கீகரித்துள்ளது. இதுதொடர்பாக தவெக தலைவரும் தமிழக முதல்வருமான விஜய் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மதச்சார்பற்ற சமூகநீதிக் கொள்கையுடன் அரசியல் களம் கண்டே 27 மாதங்கள் தான் ஆகின்றது. ஆனால் அதற்குள், தமிழக அரசியல் வரலாற்றில் எவருக்கும் கிடைத்திராத ஒரு பேரதிசயத்தை, கடந்த சட்டமன்றத் தேர்தலில் நிகழ்த்திக் காட்டினீர்கள். 35 சதவீத வாக்குகளுடன் தனிப் பெரும் கட்சியாக தவெகவை உயர்த்திப் பிடித்தீர்கள். உங்கள் தீர்ப்பை மதித்த ஜனநாயக சக்திகளின் ஆதரவுடன் இதோ இன்று, தமிழக மக்களின் முதல் சேவகனாக, முதலமைச்சராக உங்கள் விஜய்.




கூட்டணி அமைத்து, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் ஆட்சியை நிறுவிக் காட்டி இருக்கிறோம்.

இந்திய தேர்தல் ஆணையம் உங்கள் தமிழக வெற்றிக் கழகத்தை, தமிழகம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக அறிவித்துள்ளது.

ஜனநாயகப் புரட்சியை சத்தமில்லாமல் நிகழ்த்திய உங்கள் விசில் சின்னத்தையும் தவெக வின் சின்னமாக அங்கீ கரித்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கையுடன் நம்மை நம்புகிற ஒட்டுமொத்த மக்களுக்கான நன்றிக்கடன் பணி என்றென்றும் தொடரும். இந்த வேளையில், பேருழைப்பை தந்து கழகம் காக்கும் தோழர்களையும் நிர்வாகிகளையும் நெகிழ்வுடன் நினைத்துப் பார்க்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# பேராசிரியர் சாலமன் பாப்பையா மறைவு தமிழ்கூறு நல்லுலகிற்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு: முதலமைச்சர் விஜய் இரங்கல்

சென்னை 12, செப்டம்பர் 2026: பேராசிரியர் சாலமன் பாப்பையா மறைவு தமிழ்கூறு நல்லுலகிற்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு: முதலமைச்சர் விஜய் இரங்கல் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் தள பதிவில், தமிழின் பெருமையையும், தமிழர்களின் வாழ்வியலையும் பட்டிமன்ற மேடைகள் வழியாக உலகறியச் செய்த தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயரமும், வேதனையும் அடைந்தேன்.

தமது நகைச்சுவை கலந்த பேச்சாலும், ஆழ்ந்த தமிழ்ப் புலமையாலும், சமூகச் சிந்தனைகளை எளிய முறையில் மக்களிடம் கொண்டு சேர்த்ததோடு, பட்டிமன்றங்களை வெறும் பொழுதுபோக்கு நிகழ்வுகளாக



அல்லாமல், சிந்தனையைத் தூண்டும் அறிவுத் தளங்களாக மாற்றியதில் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் பங்கு மகத்தானது. அவரது மறைவு தமிழ் கூறு நல்லுலகிற்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்று அவர் கூறியுள்ளார்.

# சமத்துவப் போராளி இமானுவேல் சேகரனாரின் பெரும்புகழ் வாழ்க: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்!

சென்னை 12, செப்டம்பர் 2026: சமத்துவப் போராளி இமானுவேல் சேகரனார் நினைவு நாளையொட்டி திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்; சமத்துவப் போராளி இமானுவேல் சேகரனார் நினைவு நாள். தியாகி இமானுவேல் சேகரனாரின் நூற்றாண்டையொட்டி அவரது பிறந்தநாளினை அரசுவிழாவாகக் கொண்டாட ஆணை, பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் என அவரது நினைவைப் போற்றும் சிறப்பான பணிகளைக் கடந்த 5 ஆண்டு திராவிட மாடல் அரசு ஆட்சியில் மேற்கொண்



டோம்.

நாட்டின் விடுதலைக்காகவும், சமூகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளுக்கு எதிராகவும் உறுதியான போராட்டங்களை முன்னெடுத்த இமானுவேல் சேகரனாரின் பணிகளும் தியாகமும் சமத்துவத்தை நோக்கிய நமது முயற்சிகளுக்கு என்றும் துணைநிற்கும்! இமானுவேல் சேகரனாரின் பெரும்புகழ் வாழ்க!

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பைடன் ஆட்சியில் உலக நாடுகள் அமெரிக்காவை பார்த்து கேலி செய்தன; ஆனால் இப்போது நாம் தான் சூப்பர் பவர் - அமெரிக்க அதிபர்

சென்னை, 12 செப்டம்பர் 2026: தான் ஆட்சிக்கு வந்துள்ள கடந்த 19 மாதங்களில், அளித்த ஒவ்வொரு வாக்குறுதியையும் நிறைவேற்றியுள்ளதாக் அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். டெக்சாஸ் மாநிலம் டல்லாஸில் நடைபெற்ற குடியரசுக் கட்சியின் இடைத் தேர்தல் மாநாட்டில் பங்கேற்று பேசிய அமெரிக்க அதிபர், இன்னும் சொல்லப் போனால் நான் அளித்த வாக்குறுதிகளை விடவும் அதிகமானவற்றையே செய்து முடித்துள்ளேன் என்று கருதுகிறேன். முன்னர் அமெரிக்க அதிபராக இருந்த ஜோ பைடனும் தீவிர இடதுசாரி ஜனநாயகக் கட்சியினரும் அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான பணவீக்கத்தை உருவாக்கி விட்டு சென்றனர்.

அவர்கள் அமெரிக்க நகரங்களை மரணம், துயரம், கொலை, வறுமை மற்றும் அழிவு நிறைந்த இடங்களாக மாற்றியதுடன், அமெரிக்காவை உலகமே கேலி செய்யும் நிலைக்குத் தள்ளினர். பைடன் நிர்வாகத்தின் கீழ் நமது எல்லைகள் திறக்கப்பட்டன, குற்றங்கள் அதிகரித்தன, பொருளாதாரம் சீர்குலைந்தது. அந்த பலவீனமான நிர்வாகத்தால் உலக நாடுகள் அனைத்தும் அமெரிக்காவைப் பார்த்து கேலி செய்யும் நிலைதான் நிலவியது. ஆனால், நாம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு,



உலக அரங்கில் அமெரிக்காவுக்கான மரியாதை முழுமையாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இப்போது யாரும் நம்மைக் கண்டு கேலி செய்வதில்லை.

அமெரிக்காவின் அந்த இருண்ட காலத்தை நாங்கள் இப்போது பொற்கால மாக மாற்றி உள்ளோம். அமெரிக்க வரலாற்றிலேயே மிகப்பெரிய அளவிலான வரிக் குறைப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளோம். தற்போது உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் வேகமாகத் தணிந்து வருகின்றன, விலைவாசிப் பற்றாக் குறை பிரச்சனை இப்போது கட்டுக்குள் வந்துவிட்டது என கூறினார்.

முக்கியமாக ராணுவத்தில் மிகப்பெரிய முதலீடுகளைச் செய்துள்ளோம். இதன் மூலம் அமெரிக்காவை எரிசக்தி மற்றும் ராணுவத் துறையில் உலகின் வல்லரசாக உயர்த்தி இருக்கிறோம். தற்போதைய சூழலில் உலகில் அமெரிக்காவே 'உலகின் வல்லரசு' என்று குறிப்பிட்டார்.

# எச்-1 பி விசா: 60 நாள் சலுகைக் காலத்தை ரத்து செய்ய டிரம்ப் நிர்வாகம் முன்மொழிவு

சென்னை 12, செப்டம்பர் 2026: எச்-1 பி விசா வைத்திருப்பவர்கள் வேலை இழந்த பிறகு, அமெரிக்காவில் தங்குவதற்கான 60 நாள் சலுகைக்காலத்தை முற்றிலுமாக ரத்து செய்ய அதிபர் டிரம்ப் நிர்வாகம் முன்மொழிந்துள்ளது.

அமெரிக்க அதிபராக 2வது முறையாக பதவியேற்ற டொனால்டு டிரம்ப், அந்நாட்டவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கில், 'எச் - 1 பி' விசா நடைமுறைகளில் மாற்றம் கொண்டு வந்தார். அந்த விசா பெறுவதற்கான விண்ணப்பக் கட்டணத்தையும் பல மடங்கு உயர்த்தினார்.

இதையடுத்து, 'எச் - 1 பி' விசாவுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இருந்தும் பல்வேறு மாற்றங்களை அதிபர் டிரம்ப் மேற்கொண்டு வருகிறார். அந்தவகையில் எச்-1 பி விசா வைத்திருப்பவர்கள் வேலை இழந்த பிறகு, அமெரிக்காவில் தங்குவதற்கான 60 நாள் சலுகைக் காலத்தை முற்றிலுமாக ரத்து செய்ய அதிபர் டிரம்ப் நிர்வாகம் முன்மொழிந்துள்ளது.

அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை இதற்கான புதிய விதிமுறைகளை அறிவிப்பாக வெளியிட்டு இருக்கிறது. எச்1 பி விசா மற்றும் சில தற்காலிக விசாக்களைக் கொண்ட வெளிநாட்டு ஊழியர்கள் தங்கள் வேலை இழந்த அடுத்த நாளே அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டும் அல்லது சட்டப்பூர்வமாகத் தங்குவதற்கான மாற்று வழிகளை உடனடியாகச் செய்ய வேண்டும். வேலை வாய்ப்புகள் அமெரிக்க குடிமக்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், சட்டப்பூர்வ குடியேற்றங்களை முறைப்படுத்த




வுமே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக டிரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2017ம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்த இந்த 60 நாள் சலுகை காலம், வேலையை இழந்தால் ஊழியர்கள் புதிய வேலை தேட உதவியாக இருந்தது; இந்த புதிய மாற்றம் இன்னும் சட்டமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த அறிவிப்பு குறித்து 60 நாட்கள் மக்களின் கருத்துக்கள் கேட்கப்படும்; அதன் பிறகே இறுதி முடிவு எடுக்கப்படும். எச்1 பி விசாவால் அதிகம் இந்தியர்கள் பயனடைந்து வருகின்றனர். ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த விசாக்களில் கடந்தாண்டு 70 சதவீதம் இந்தியர்களுக்கு கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய விதி முறை நடைமுறைக்கு வந்தால், அமெரிக்காவின் தொழில்நுட்பம் மற்றும் சேவைத் துறைகளில் பணியாற்றி வரும் இந்திய தொழில்நுட்ப வல்லுநர்கள் பாதிக்கப்படக்கூடும். வேலை இழந்தவுடன் புதிய வேலை தேடுவதற்கான அவகாசம் குறைவதால், அவர்களின் அமெரிக்காவில் தங்கும் நிலையும் கேள்விக்குறியாகும்.

## சுமதுரா குழுமம் ரூ.17,000 கோடி மதிப்பிலான முதலீட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது; 2030-க்குள் பல்வேறு சொத்து வகைகளில் 45 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான கட்டுமானங்களை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது

சென்னை 12, செப்டம்பர் 2026: இந்திய ரியல் எஸ்டேட் துறையில் தனது பயணத்தின் மூன்று தசாப்தங்களைக் குறிக்கும் வகையில், தென்னிந்தியாவின் மிகவும் நம்பகமான மற்றும் பன்முகத் தன்மை கொண்ட ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றான 'சுமதுரா குரூப்', 2027 முதல் 2030 வரையிலான நிதியாண்டுகளை உள்ளடக்கிய தனது அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான லட்சிய வளர்ச்சித் திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்த உத்தியின் ஒரு பகுதியாக, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் குடியிருப்பு, வணிகம் மற்றும் கிடங்கு சார்ந்த பிரிவுகளில் சுமார் 45 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான திட்டங்களை, ரூ.17,000 கோடி முதலீட்டில் மேற்கொள்ள இக்குழுமம் திட்டமிட்டுள்ளது.

ரியல் எஸ்டேட் துறையில் இக்குழுமம் 30 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்த மைல்கல், குடியிருப்பு சார்ந்த நிறுவனமாகத் தொடங்கி, தற்போது பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் விரிவான செயல்பாடுகளையும் பல்வேறு வகையான சொத்து வகைகளில் வளர்ந்து வரும் திட்டங்களையும் கொண்ட பன்முகத் தன்மை வாய்ந்த ரியல் எஸ்டேட் குழுமமாக அது அடைந்துள்ள வளர்ச்சியையும் பரிணாமத்தையும் பிரதிபலிக்கிறது.

### குடியிருப்பு விரிவாக்கம்

தனது குடியிருப்புத் திட்டங்களின் தொகுப்பை வலுப்படுத்தும் விதமாக, இக்குழுமம் தனது முக்கியச் சந்தைப் பகுதிகளில் சுமார் 35 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான திட்டங்களை அறிமுகப் படுத்தத் திட்டமிட்டுள்ளது;

இவற்றின் மொத்த மேம்பாட்டு மதிப்பு (ஜிடிவி) சுமார் ரூ.38,000 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சொகுசு வில்லா பிரிவில் களமிறங்கவும், பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் வேகமாக வளர்ந்து வரும் குறிப்பிட்ட சில பகுதிகளில் தனது நில இருப்பை விரிவுபடுத்தவும் இக்குழுமம் திட்டமிட்டுள்ளது.

### வணிக ரீதியான ரியல் எஸ்டேட்

வணிகச் செயல்பாட்டுப் பிரிவில், சுமார் 4.2 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான 'கிரேட் ஏ' தரத்திலான அலுவலக இடங்களை உருவாக்க சுமதுரா குழுமம் திட்டமிட்டுள்ளது; இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் ரூ.680 கோடி வாடகை வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது.

பெங்களூரின் 'அவுட்டர் ரிங் ரோடு' (ஓஆர்ஆர்) பகுதியில் உள்ள 'கிரேட் ஏ' வணிக ரீதியிலான ரியல் எஸ்டேட் சந்தையில், இக்குழுமம் தனது இருப்பை மேலும் வலுப்படுத்தத் தயாராகி வருகிறது.

இந்த விரிவாக்கம், வருமானம் ஈட்டும் சொத்துகளின் கணிசமான தொகுப்பை உருவாக்குவதோடு, வணிக ரீதியிலான அதன் செயல்பாட்டுத் தளத்தையும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கிடங்கு மற்றும் சரக்குக் கையாளுதல்

இக்குழுமம் தனது கிடங்கு வசதிகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது; இதன்கீழ் சுமார் 5.6 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான கட்டுமானப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன, மேலும் இதன் மதிப்பிடப்பட்ட ஆண்டு வாடகை வருவாய் ரூ.462 கோடியாகும்.

பெங்களூருவின் ஹோஸ்கோட்டையில் அமைந்துள்ள லாஜிஸ்டிக்ஸ் பூங்காவின் வெற்றியையும், சென்னையின் ரெட்ஹில்ஸில் சமீபத்தில் உருவாக்கப்பட்ட 1.2 மில்லியன் சதுர அடி பரப்பளவு கொண்ட 'கிரேட் ஏ' ரக தொழில்துறை மற்றும் லாஜிஸ்டிக்ஸ் பூங்காவையும் அடிப்படையாகக் கொண்டு, இந்த விரிவாக்க நடவடிக்கையானது தொழில்துறை மற்றும் லாஜிஸ்டிக்ஸ் துறையில் இக்குழுமத்தின் இருப்பை மேலும் வலுப்படுத்தும்; அத்துடன் முக்கிய கிடங்கு மையப் பகுதிகளில் வருமானம் ஈட்டும் சொத்துகளின் தொகுப்பை இது வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## காவேரி மருத்துவமனையில் 'எண்டோஸ்கோபிக் ஸ்பைனல் ஃபியூஷன்' சிகிச்சை அறிமுகம். முதுகுத் தண்டுவடப் பிரச்சினைகளுக்கும் - நரம்பு அழுத்தத்திற்கும் நவீன நுண்துளை அறுவைசிகிச்சை மூலம் தீர்வு




சென்னை, 12 செப்டம்பர் 2026: காவேரி மருத்துவமனை, ஆழ்வார் பேட்டை, 'எண்டோஸ்கோபிக் ஃபியூஷன்' அறுவைசிகிச்சையை சென்னையில் முதல் முறையாக அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் தனது முதுகுத் தண்டுவடப் பராமரிப்புத் திட்டத்தை இம்மருத்துவமனை மேம்படுத்தியுள்ளது. திறந்தநிலை அறுவை சிகிச்சை அல்லது வழக்கமான குறைந்த ஊடுருவல் உள்ள அறுவைசிகிச்சையை (எம்ஐஎஸ்) விட சிறிய துளை மூலம் தண்டுவட அறுவைசிகிச்சை மூலம் பலன் பெறக்கூடிய நோயாளிகளுக்கு இது ஒரு சிறந்த மாற்று முறையாகும்.

சுமார் 8 மி.மீ அளவுள்ள சிறிய துளை மூலம் அதிக துல்லியமான கேமரா மற்றும் நுண் கருவிகளைச் செலுத்தி இந்த எண்டோஸ்கோபிக் ஃபியூஷன் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இதன் மூலம் நரம்புகளில் உள்ள அழுத்தம் நீக்கப்பட்டு, சுற்றியுள்ள தசைகள், எலும்புகள் மற்றும் தசைநார்கள் பாதிக்கப் படாமல் உட்பதியம் (இம்ப்ளாண்ட்) செய்யப்படுகிறது. வழக்கமான அறுவைசிகிச்சைகளில் ஏற்படும் பெரிய தழும்புகள், தசை பாதிப்புகள், அதிக இரத்த இழப்பு மற்றும் அறுவைசிகிச்சைக்குப் பிந்தைய வலி ஆகியவை இதில் மிகக் குறைவாகவே இருப்பதால், நோயாளிகள் விரைவாக குணமடைய இந்த சிகிச்சை உதவுகிறது.

வழக்கமான திறந்தநிலை அறுவைசிகிச்சையில் பெரிய அளவிலான கீறல்களும், அதிகளவு தசைப் பிரித்தலும் தேவைப் படும். வழக்கமான குறைந்தபட்ச ஊடுருவல் அறுவைசிகிச்சையிலும் சுமார் 20 மி.மீ அளவில் கீறலிடப்படுவதால் திசுக்களுக்குச் சிறிய அளவில் பாதிப்பு உண்டாகலாம். ஆனால், எண்டோஸ்கோபிக் ஃபியூஷன் என்ற இந்த நவீன சிகிச்சை உத்தியில் திசு சேதம், இரத்த இழப்பு மற்றும் அறுவைசிகிச்சைக்குப் பிந்தைய வலி ஆகியவை மிக குறைவாகவே இருப்பது, நோயாளிகள் மிக விரைவில் குணமடைய உதவுகிறது.

தண்டுவட வட்டு தேய்மானம், தண்டுவடக் கால்வாய் சுருக்கம் (Spinal stenosis) மற்றும் சில ஆரம்ப நிலை தண்டுவட தளர்வுகள் போன்ற தேய்மானத்தால் ஏற்படும் இடுப்புத் தண்டுவடப் பிரச்சனைகள். முறையான ஆரம்பக் கட்ட சிகிச்சைகளை மேற்கொண்ட பிறகும் குணமாகாமல், தொடர்ச்சியான நரம்பு அழுத்த கால் வலியால் அவதிப்படுபவர்கள், ஏற்கனவே திறந்தநிலை அறுவைசிகிச்சை செய்த இடத்தில் தழும்புகள் உருவாகி, மீண்டும் அதே முறையில் அறுவைசிகிச்சை செய்வது அதிக அபாயத்தை ஏற்படுத்தும் என்பதால், மாற்று அறுவைசிகிச்சை தேவைப்படும் நபர்கள் மற்றும் நீண்ட நேரம் நடைபெறும் திறந்தநிலை அறுவைசிகிச்சையின் சுமையைத் தாங்க முடியாத சில முதியவர்களுக்கும் இச்சிகிச்சை முறை பொருத்தமானதாக இருக்கும்.

## நகைச்சுவையுடன் வலுவான சமூக கருத்தை முன்வைக்கும் பொழுதுபோக்கு திரைப்படமான 'நல்லபடம்' செப்டம்பர் 18ஆம் தேதி வெளியாகிறது!

சென்னை, 12 செப்டம்பர் 2026: தமிழ் சினிமா சமூக அக்கறை கொண்ட பிரச்சினைகளை நகைச்சுவை மற்றும் வணிக ரீதியான பொழுது போக்கு அம்சங்களுடன் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. அந்த வகையில், நகைச்சுவை, காதல், சென்டிமென்ட் மற்றும் வலுவான சமூகக் கருத்தை வித்தியாசமான கதைக்களத்துடன் 'நல்லபடம்' திரைப்படம் உருவாகியுள்ளது. சி. பிரபுராம் இயக்கியுள்ள இப்படத்தில் டாக்டர் ஏ. ஹரிஷ் கதாநாயகனாகவும், தனலட்சுமி கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். இப்படம் செப்டம்பர் 18 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

மதுவுக்கு அடிமையான குமரனை மையமாகக் கொண்டு கதை நகர்கிறது. அவரது தாயார் எப்போதும் அவருக்கு ஆதரவாக இருக்கிறார். ஆனால், அவரது சகோதரி அமுதா, குமரனின் குடிப்பழக்கத்தை கடுமையாக எதிர்க்கிறார். அவரது காதலியும் குமரனை அந்தப் பழக்கத்திலிருந்து மாற்றுவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்கிறார்.

இதற்கிடையே, குமரனைப் போலவே மதுவை விரும்பும் சிலர் ஒன்றிணைந்து ஓர் அமைப்பை உருவாக்கி, குமரனை அதன் தலைவராகத் தேர்வு செய்கின்றனர். இந்நிலையில், நாடு முழுவதும் மதுவுக்கு அரசு தடை விதிப்பதாக அறிவிக்கிறது. இதனால், தனது வாழ்க்கையாக இருந்த மதுவின்றி எப்படி வாழ்வது என்ற மிகப் பெரிய சவாலை குமரன் எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகிறது. அதன்பிறகு குமரனின் வாழ்க்கையில் நிகழும் எதிர்பாராத சம்பவங்களும், புதிய சூழலை சமாளிக்க அவர் எதிர் கொள்ளும் நகைச்சுவையான பிரச்சினைகளுமே 'நல்லபடம்'.



மதுவால் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் இப்படம் பேசுகிறது. அதேசமயம் நகைச்சுவை, காதல், சென்டிமென்ட், சமூக விழிப்புணர்வு மற்றும் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவரும் வணிகரீதியான பொழுதுபோக்கு அம்சங்களும் இந்தப் படத்தில் இருக்கிறது. வித்தியாசமான கதைக் களம் மற்றும் சமூக, வணிக அணுகுமுறையுடன் உருவாகியுள்ள இப்படம், பொழுது போக்கு அம்சத்திற்கு குறைவில்லாமல் சமூகக் கருத்தை ரசிகர்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் குழுவில் இனியன் ஜே ஹாரிஸ் ஒளிப்பதிவாளராகவும், பி.ஆர். பிரகாஷ் படத்தொகுப்பாளராகவும், சகிஷ்ணா சேவியர் இசையமைப்பாளராகவும் பணியாற்றியுள்ளனர். அஸ்மின் பாடல்கள் எழுதியிருக்கிறார். ஹரிஷ் சினிமாஸ் நிறுவனத்தின் சார்பில் ஏ. அழகுபாண்டியன் தயாரித்துள்ள இப்படத்தை ஹரிஷ் சினிமாஸ் நிறுவனமே விநியோகம் செய்து வெளியிடுகிறது.

சி. பிரபுராம் இயக்கியுள்ள 'நல்லபடம்' திரைப்படம் உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் செப்டம்பர் 18 அன்று வெளியாகிறது.

## மூன்று ஷாட்கள் பின்னடைவிலிருந்து மீண்டு, சிபிசிஎல் வழங்கும் சென்னை ஓப்பன் 2026 பட்டத்தை வென்றார் விராஜ் மடப்பா

சென்னை 12, செப்டம்பர் 2026: சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) வழங்கும், ஐஎன்ஆர் 1 கோடி பரிசுத்தொகை கொண்ட சென்னை ஓப்பன் 2026 போட்டியில், மூன்று ஷாட்கள் பின்னடைவில் இருந்த விராஜ் மடப்பா, போகி எதுவுமின்றி எட்டு-அண்டர் 64 ஸ்கோரைப் பதிவு செய்து, ஒரு ஷாட் வித்தியாசத்தில் சாம்பியன் பட்டத்தை வென்றார். இந்தப் போட்டி டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் கோர்ஸ்-ல் நடைபெற்றது.

28 வயதான கொல்கத்தாவைச் சேர்ந்த கோல்ஃப் வீரர் விராஜ் மடப்பா (72-67-63-64), இறுதிச் சுற்றை முந்தைய நாள் முன்னிலையில் இருந்த அஜீதேஷ் சந்துவைக் காட்டிலும் மூன்று ஷாட்கள் பின்தங்கி தொடங்கினார். அவர் எட்டு பேர்டிகளைப் பதிவு செய்து, 22-அண்டர் 266 என்ற மொத்த ஸ்கோருடன் தனது நான்காவது தொழில்முறை பட்டத்தை வென்றார்.




2018ஆம் ஆண்டு ஆசியன் டூர் போட்டியில் வெற்றி பெற்ற இளம் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்த விராஜ் மடப்பா, இந்த வெற்றியின் மூலம் ஐஎன்ஆர் 15 லட்சம் பரிசுத் தொகையைப் பெற்றார். இந்த வெற்றி, 2026 டிபி வேர்ல்டு பிஜிடிஐ ஆர்டர் ஆஃப் மெரிட் தரவரிசையில் அவரை 44வது இடத்திலிருந்து 22வது இடத்திற்கு முன்னேற்றியது. இதன் மூலம், இந்த சீசனில் அவரது மொத்த வருமானம் ஐஎன்ஆர் 23,90,042 ஆக உயர்ந்ததுடன், டிபி வேர்ல்டு இந்தியா சேம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பையும் உறுதி செய்தார்.




"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

## வந்தே பாரதம் நிகழ்ச்சி : ஆர்சனிக் அல்லாத நீர் முதல் ஏஐ நோய்க்கணிப்பு வரை... எப்பிசோடு 3, 4 & 5-இல் மேடையேறிய ஒன்பது புதுமைப்படைப்பாளர்கள்



சென்னை 12, செப்டம்பர் 2026: வந்தே பாரதம் - இந்தியாவின் அடித்தளப் புதுமைப்படைப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோரை கண்டறிந்து அவர்களைக் கொண்டாடுவதற்கான திரு. கௌதம் அதானியின் நாடு தழுவிய இந்த முயற்சி, அதன் 3, 4 மற்றும் 5-ஆம் அத்தியாயங்களுடன் தனது தொலைக்காட்சி ஒளிபரப்பைத் தொடர்ந்து முடித்துள்ளது. இதில், ஆர்சனிக் கலந்த நிலத்தடி நீர் சிக்கல், கிராமப்புற மகரந்தச் சேர்க்கை மற்றும் கடைக்கோடி மக்களுக்குமான நோய்க் கணிப்பு சேவைகள் என இந்தியாவின் மிக முக்கியமான சில சவால்களுக்குத் தீர்வுகாணும் ஒன்பது தொடக்க நிறுவனங்கள் (ஸ்டார்அப்ஸ்) அறிமுகப்படுத்தப்பட்டன. அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பிரணவ் அதானி; ரோசானா நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அன்குர் தஹியா; வென்ச்சர் கேடலிஸ்ட்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் அபூர்வா ரஞ்சன் சர்மா; கேடியா அட்வைசரி நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் இயக்குநர் விஜய் கேடியா; மற்றும் டெட்ர் காலேஜ் ஆஃப் பிசினஸ் & மாஸ்டர்ஸ் யூனியன் நிறுவனத்தின் நிறுவனர் பிரதாம் மிட்டல் ஆகியோர் அடங்கிய முதலீட்டாளர்கள் மற்றும் வழிகாட்டிகளின் குழுவின் முன் இந்த நிறுவனங்கள் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பித்தன.

அத்தியாயம் 3 (செப்டம்பர் 4 அன்று ஒளிபரப்பானது): நவ்மார்க், ஜன் நீதி மற்றும் பிளெண்டி

இருபதுகளின் தொடக்கத்தில் உள்ள சகோதரர்கள் இருவரால் தொடங்கப்பட்ட பீகாரைச் சேர்ந்த 'நவ்மார்க் ரிசர்ச் அண்ட் இன்னோவேஷன்' எனும் ஆழமான தொழில்நுட்ப நீர் சார்ந்த (deep-tech water) தொடக்க நிறுவனம், 'மாரு' எனும் காப்புரிமை பெற்ற அமைப்பை அறிமுகப்படுத்தியது. இது இரசாயனப் பயன்பாடு ஏதுமின்றி குடிநீரில் உள்ள ஆர்சனிக்கை நீக்கும் ஒரு காந்தப் பிரித்தெடுப்பு அமைப்பாகும். இந்நிறுவனம் தனது களப் பணிகளின் மூலம் இதுவரை 31.9 லட்சத்திற்கும் அதிகமான லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கியுள்ளது. பிரணவ் அதானி, 'வந்தே விங்ஸ்' வழியே அதானி குழுமத்துடன் இணைந்து செயல்படுவதற்கான நிறுவன வழிகாட்டுதலை வழங்கினார். மேலும் அன்குர் தஹியா, 'ரோசானா' நெட்வொர்க்குகளைப் பயன்படுத்தி கங்கைச் சமவெளி முழுவதும் இத்தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துவதற்கான உதவிகளை

வழங்குவதாகத் தெரிவித்தார்.

அத்தியாயம் 4 (செப்டம்பர் 5 அன்று ஒளிபரப்பானது): தாரக்ஷா எக்கோசொல்யூஷன்ஸ், ஹம்பிள் பீ மற்றும் பௌமியா இன்னோவேஷன்ஸ்

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த 'ஹம்பிள் பீ' எனும் நிறுவனம், அதன் ஏஐ தொழில்நுட்பம் கொண்ட 'பீகைண்ட்' தளத்தின் மூலம் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய தேனீ வளர்ப்பு நிறுவனங்களின் உரிமையாளர்களாக கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பெண்களை அதிகாரப்படுத்துகிறது. பிரணவ் அதானி, 'வந்தே விங்ஸ்' வழியே அதானி குழுமத்தின் வழிகாட்டுதலை வழங்கியதோடு, அதானியின் ஆப்பிள் பண்ணைகளில் பணியாற்றுவதற்கான சாத்தியமான வாய்ப்பையும், அதானி விமான நிலையங்களில் இணைவதற்கான வாய்ப்புகளையும் வழங்கினார்; அன்குர் தஹியா, 'ரோசானா' நெட்வொர்க்குகள் மூலம் கிராமப்புற இணைப்புகளுக்கான உதவிகளை வழங்கினார், அதே வேளையில் டாக்டர் அபூர்வா ரஞ்சன் சர்மா, பிந்தைய மதிப்பீட்டு அடிப்படையில் ரூ.5 கோடி முதலீட்டை வழங்குவதாகத் தெரிவித்தார்.

அத்தியாயம் 5 (செப்டம்பர் 6 அன்று ஒளிபரப்பானது): திங்கர்பெல் லேப்ஸ், பிரைமரி ஹெல்தெக் மற்றும் ஜீவாஸ்கோப்

பிட்ஸ் பிலானி முன்னாள் மாணவர்களால் தொடங்கப்பட்ட கர்நாடகாவைச் சேர்ந்த 'திங்கர்பெல் லேப்ஸ்' எனும் கல்வி-தொழில்நுட்பத் (edtech) தொடக்க நிறுவனம், உலகின் முதல் சுய-கற்றல் பிரெய்லி கற்றல் சாதனமான 'ஆனி'யை உருவாக்கியுள்ளது. பிரதாம் மிட்டல், திங்கர்பெல் லேப்ஸ் அலுவலகத்திற்கு நேரில் சென்று பார்வையிடுவதாகவும், கூட்டுப்பணி மேற்கொள்வதாகவும் உறுதி அளித்தார்; விஜய் கேடியா, அன்குர் தஹியா மற்றும் டாக்டர் அபூர்வா ரஞ்சன் சர்மா ஆகிய மூவரும் முதலீடு செய்ய ஆர்வம் தெரிவித்தனர். மேலும், அன்குர் தஹியா 'ரோசானா' நெட்வொர்க் மூலம் அடித்தள அளவிலான விநியோக ஆதரவை வழங்குவதாகவும், டாக்டர் அபூர்வா ரஞ்சன் சர்மா தனது முதலீட்டாளர் சமூகத்திற்குள் இணைப்புகளை ஏற்படுத்தித் தருவதாகவும் தெரிவித்தனர்.

## தமிழறிஞர் சாலமன் பாப்பையா மறைவு: மநீம தலைவர் கமல்ஹாசன் எம்.பி. இரங்கல்

சென்னை 12, செப்டம்பர் 2026: "நிறைவாழ்வில் பெருஞ்செயல் செய்து காலம் சென்றிருக்கும் அவரது புகழ் நிலைத்திருக்கும்" என தமிழறிஞர் சாலமன் பாப்பையா மறைவிற்கு மநீம தலைவர் கமல்ஹாசன் எம்.பி. இரங்கல் தெரிவித்துள்ளார்.

புகழ்பெற்ற தமிழறிஞரும், பட்டிமன்ற நடுவரும், பேராசிரியருமான சாலமன் பாப்பையா வயது முதிர்வு மற்றும் உடல் நலக் குறைவு காரணமாகத் தனது 90-வது வயதில் மதுரையில் காலமானார். இன்று காலை மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அவரது மறைவு நிகழ்ந்தது. இவரது மறைவிற்கு அரசியாக கட்சி தலைவர்கள், சினிமா பிரபலங்கள், பொது மக்கள் என பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் மநீம தலைவர் கமல்ஹாசன் எம்.பி. இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது; "பழந்தமிழ் இலக்கியங்களைப் பாமர மொழியில் விளக்குவது தனித்த ஒரு கலை. அந்தத் திறமையை, பட்டிமன்றம் என்ற வடிவத்தின் மூலம் நிலைநாட்டி நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பேராசிரியர் சாலமன் பாப்பையா மறைந்தார். நிறைவாழ்வில் பெருஞ்செயல் செய்து காலம் சென்றிருக்கும் அவரது புகழ் நிலைத்திருக்கும்.

## தமிழகத்தில் 15,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு ஏஎஸ்கே மையங்கள் மூலம் இலவச Pneumococcal தடுப்பூசி முகாமை நடத்தியது ஸ்டார் ஹெல்த்!



சென்னை 12, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைடு இன்சூரன்ஸ் நிறுவனம் (என்எஸ்இ: ஸ்டார்ஹெல்த்; பிஎஸ்இ: 543412), எழும்பூரில் உள்ள அதன் ஏஎஸ்கே+ (ஆரோக்கிய சேவா கேந்திரா) சென்னை மையம் மூலம் இரண்டு நாள் Pneumococcal தடுப்பூசி முகாமை நடத்தியது. இந்த முகாம் மூலமாக 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர். பெரியவர்களுக்கான தடுப்பூசி சேவைகளை எளிதில் கிடைக்கச் செய்வதையும், நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு சார்ந்த மருத்துவ பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த இலவச முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் சீனியர் சிட்டிசன்கள் மற்றும் வயது வந்தோர்கள் பலரும் கலந்து கொண்டனர். மேலும், மருத்துவ நிபுணர்கள் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி, தடுப்பூசி குறித்தும் மற்றும் சரியான நேரத்தில் தரப்படும் மருத்துவ நடவடிக்கைகளின் முக்கியத்துவம் குறித்து விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

ஏஎஸ்கே) மையங்கள் மூலம் தடுப்புச் சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்துதல்

மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு எளிதில் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் திட்டத்தின் ஒரு பகுதியாக - ஆரோக் கிய சேவா கேந்திரா (ஏஎஸ்கே) செயல்பட்டு வருகிறது. சென்னை எழும்பூரில் உள்ள ஏஎஸ்கே+ மையமானது, எழும்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு மருத்துவ ஆலோசனைகள், உடல் சார்ந்த பரிசோதனைகள், நீரிழிவு நோய் பரிசோதனை, நோய் கண்டறிதல் பரிசோதனைகள், மருந்துகள், சுகாதார ஆலோசனைகள் மற்றும் தடுப்பூசி உதவிகளை வழங்கி வருகிறது.


இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த சென்னை, கரூர், கோவில்பட்டி, நாகர் கோவில் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து மையங்கள் உட்பட 27 ஏஎஸ்கே மையங்களை ஸ்டார் ஹெல்த் நிறுவனம் தற்போது இயக்கி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஏஎஸ்கே மையங்கள் மூலம் இதுவரை 15,000-க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்துள்ளனர்; இதில் ஆய்வகச் சேவைகளைப் பெற்ற சுமார் 8,000 பயனாளிகளும் அடங்குவர். இந்த மையங்கள் மூலம் இதுவரை சுமார் 22,000 பரிசோதனைகளும் 14,000 மருந்தகச் சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அகில இந்திய அளவில், ஸ்டார் ஹெல்தின் ஏஎஸ்கே மையங்கள் 1.5 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளுக்கு சேவையாற்றி வருகிறது. இந்த நெட்வொர்க் மூலம் 1.6 லட்சத்திற்கும் அதிகமான பரிசோதனைகளும் 1.4 லட்சத்திற்கும் அதிகமான மருந்தகச் சேவைகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 78,000 பயனாளிகள் ஆய்வகச் சேவைகளைப் பெற்றுள்ளனர்.

தடுப்பூசி முகாமைத் தொடர்ந்து, தனது ஏஎஸ்கே நெட்வொர்க் மூலம் நோய் தடுப்புச் சுகாதார முயற்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தடுப்பூசி முகாம்களைத் தொடர்ந்து கண்டறிந்து நடைமுறைப்படுத்தும் என்று ஸ்டார் ஹெல்த் நிறுவனம் தெரிவித்துள்ளது. நிறுவனம் தனது மருத்துவச் சேவைகளை மேலும் வலுப்படுத்தவும், தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் மருத்துவ விழிப்புணர்வு மற்றும் மருத்துவ வசதிகள் எளிதில் கிடைப்பதை மேம்படுத்தவும் பங்களிக்கத் திட்டமிட்டுள்ளது.

## பரந்தூர் விமான நிலையம் அமையவிருந்த இடத்தில் 175 கோடி ரூபாய் மதிப்பிலான சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க பூர்வாங்க பணிகள் தொடக்கம்!




சென்னை 12, செப்டம்பர் 2026: காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் விமான நிலையம் அமையவிருந்த இடத்தில் தமிழக அரசு 175 கோடி ரூபாய் மதிப்பிலான சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பரந்தூர் அருகே மதுரமங்கலம் பகுதியில் 422 ஏக்கர் பரப்பில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. மதுரமங்கலத்தில் அமையவுள்ள இப்பூங்காவுக்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சென்னையின் 2வது விமான நிலையத்தை காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமைக்கும் திட்டத்தை முந்தைய திமுக அரசு தீவிரமாக முன்னெடுத்த நிலையில், அந்தத் திட்டத்தை முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு ரத்து செய்வதாக சமீபத்தில் அறிவித்தது.

இந்நிலையில், பரந்தூர் அருகே மதுரமங்கலம் பகுதியில் தமிழக அரசு புதிய தொழில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. மதுரமங்கலத்தில் புதிதாக சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. 175 கோடி ரூபாய் மற்றும் மின்னணுவியல் உற்பத்திப் பூங்கா தொடங்கப்பட உள்ளது.

இந்த தொழிற்பூங்கா தொடர்பான அறிவிப்பை முதல்வர் விஜய் ஏற்கனவே சட்டப் பேரவையில் 110-வது விதியின் கீழ் வெளியிட்டிருந்தார். மதுரமங்கலத்தில் தொழிற்பூங்கா அமைத்து, செமிகண்டக்டர் உற்பத்தி சார்ந்த தொழில்களுடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் அறிவித்திருந்தார்.

அறிவிப்பை தொடர்ந்து தற்போது மதுரமங்கலம் பகுதியில் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. சென்னையின் 2வது விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில், அதே பகுதியில் செமிகண்டக்டர் தொழில் வளர்ச்சியை மையமாகக் கொண்ட புதிய தொழிற்பூங்கா உருவாக இருப்பது கவனத்தை பெற்றுள்ளது.

# இந்திய ரசிகர்களுக்கு மிகப்பிடித்த ஃபேமிலி திரில்லர் திரைப்படமான 'த்ரிஷ்யம் தி கன்குலூஷன்' அக்டோபர் 2 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது!



சென்னை 12, செப்டம்பர் 2026: அபிஷேக் பதக் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தின் இறுதி அத்தியாயம், 'த்ரிஷ்யம்2' திரைப்படம் முடிந்த இடத்திலிருந்து கதை தொடர்கிறது. ஆனால், புதிய கதைக் களம் மற்றும் முற்றிலும் புதிய திரைக்கதையுடன் இப்படம் உருவாகியுள்ளது.

உண்மை புதைந்தே கிடக்கிறது. சல்காவோங்கர் குடும்பம் தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. விஜய் சல்காவோங்கர் எப்போதும் ஒருபடி முன்னிலையில் இருந்துள்ளார். ஆனால், இந்த முறை அவரை நோக்கி அரசு மீண்டும் மிகுந்த பலத்துடன் வருகிறது.

ஆண்டுகள் பல கடந்தாலும் 'த்ரிஷ்யம்' திரைப்படத்தின் அடுத்த பாகங்கள் இந்திய சினிமா ரசிகர்களால் மிகவும் விரும்பப்படும் மற்றும் கொண்டாடப்படும் குடும்பத் த்ரில்லராக உள்ளது. விஜய் சல்காவோங்கரின் உலகம் பார்வையாளர்களை கவர்ந்ததுடன், பல விவாதங்களையும் உருவாக்கியது. ஒவ்வொரு கட்டத்திலும் கோடிக்கணக்கான ரசிகர்கள் விஜய்க்கு ஆதரவாக இருந்தனர். இந்நிலையில், இறுதி அத்தியாயத்திற்கான எதிர்பார்ப்பு உச்சத்தை எட்டியுள்ள நிலையில், நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட 'த்ரிஷ்யம் தி கன்குலூஷன்' படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது.

விஜய் சல்காவோங்கராக அஜய் தேவ்கன் மீண்டும் நடிக்கிறார். ஆனால், இந்த முறை அவருக்கு எதிராக, உண்மையை எப்படியாவது வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற உறுதியுடன், குற்றப்பிரிவு எஸ்.பி. ராஜ்வீர் சிங் தோமராக ஜெய்தீப் அஹ்லாவத் களமிறங்குகிறார். விஜய்க்கு எதிரான வலிமையான சக்தியாக அவர் உருவெடுக்கிறார்.

'த்ரிஷ்யம்2' முடிந்த இடத்திலிருந்து தொடங்கும் 'த்ரிஷ்யம தி கன்குலூஷன்', புதிய கதைக்களம் மற்றும் முற்றிலும் புதிய திரைக்கதையின் மூலம் இந்த பாகத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்கிறது. சாத்தியமே இல்லை எனத் தோன்றும் இந்த வழக்கை ராஜ்வீர் சிங் தோமர் கையில் எடுக்கும்போது, விஜய் இதுவரை சந்தித்திராத அளவுக்கு கடுமையான சவாலை எதிர்கொள்கிறார். பிரகாஷ் ராஜின் வருகை கதையின் பரபரப்பை மேலும் அதிகரிக்கிறது. தபு, ஸ்ரியா சரண் மற்றும் ரஜத் கபூர் ஆகியோரும் மீண்டும் இந்த உலகிற்குத் திரும்புகின்றனர். கடந்த காலத்தின் ரகசியங்கள் மீண்டும் வெளிவர, விடை கிடைக்காத கேள்விகள் நெருங்கி வர, புதிய சக்திகள் களத்தில் இறங்குகின்றன. ஒவ்வொரு நகர்வும் அனைத்தையும் மாற்றக்கூடிய சூழலில், புத்திசாலித்தனத்திற்கும் தந்திரத்திற்கும் இடையிலான மோதலை டிரெய்லர் காட்டுகிறது.

'த்ரிஷ்யம்' திரைப்படத் தொடரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், 'த்ரிஷ்யம் தி கன்குலூஷன்' படத்தின் டிரெய்லர் வெளியீடு, இந்தக் கதை தொடங்கிய இடமான கோவாவில் நடைபெற்றது. விஜய் சல்காவோங்கர் மற்றும் அவரது கதையுடன் தொடர்புடைய முக்கியமான இடங்களில் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகப் பிரபலங்களுக்கு பிரத்யேகமாக இந்தத் திரைப்பட அனுபவம் வழங்கப்பட்டது. திரைப்படங்களின் முக்கியமான தருணங்களை மீண்டும் நினைவு கூர்ந்தபடி, விஜய் சல்காவோங்கரின் உலகிற்குள் பார்வையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இதன் நிறைவாக, பனாஜியில் பிரம்மாண்டமான டிரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில் அஜய் தேவ்கன், தபு, ஸ்ரியா சரண், ரஜத் கபூர், ஜெய்தீப் அஹ்லாவத் மற்றும் மிருணாள் ஜாதவ் ஆகிய நடிகர்களுடன், இயக்குநர், எழுத்தாளர் மற்றும் தயாரிப்பாளர் அபிஷேக் பதக், ஜியோ ஸ்டாரின் இந்தி மற்றும் ஆங்கில பொழுதுபோக்கு பிரிவின் (ஸ்ட்ரீமிங், டிவி & ஸ்டுடியோஸ்) தலைவர் மற்றும் தயாரிப்பாளர் அலோக் ஜெயின், ஸ்டார் ஸ்டுடியோ18 நிறுவனத்தின் தலைவர் மற்றும் தயாரிப்பாளர் அஜித் அந்தாரே மற்றும் தயாரிப்பாளர் குமார் மங்கத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அபிஷேக் பதக் இயக்கியிருக்கும் 'த்ரிஷ்யம் தி கன்குலூஷன்' திரைப்படத்தில் அஜய் தேவ்கன், தபு, ஸ்ரியா சரண், ரஜத் கபூர், ஜெய்தீப் அஹ்லாவத், பிரகாஷ் ராஜ், கமலேஷ் சாவந்த், இஷிதா தத்தா மற்றும் மிருணாள் ஜாதவ் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். ஸ்டார் ஸ்டுடியோ18 வழங்கும் இப்படத்தை பனோரமா ஸ்டுடியோஸ் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு அபிஷேக் பதக், ஆமில் கீயான் கான் மற்றும் பர்வீஸ் ஷேக் ஆகியோர் திரைக்கதை மற்றும் வசனம் எழுதியுள்ளனர்.

அலோக் ஜெயின், அஜித் அந்தாரே, குமார் மங்கத் பதக் மற்றும் அபிஷேக் பதக் ஆகியோர் தயாரித்துள்ள 'த்ரிஷ்யம் தி கன்குலூஷன்' திரைப்படம், அக்டோபர் 2 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

# மேட்டூர் அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 1,731 கனஅடியாக சரிவு

சென்னை 12, செப்டம்பர் 2026: மேட்டூர் அணைக்கு வரும் நீர் வரத்து குறைந்துள்ளது. மேட்டூர் அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 1,731 கன அடியாக சரிந்துள்ளது. மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வெள்ளிக்கிழமை காலை வினாடிக்கு 2,250 கன அடியிலிருந்து வினாடிக்கு 1,731 கனஅடியாக சரிந்துள்ளது. நீர் வரத்து சரிந்த நிலையில் காவிரி டெல்டா பாசனத்திற்கு அணையிலிருந்து வினாடிக்கு 12,000 கனஅடி வீதமும், கிழக்கு-மேற்கு கால்வாயில் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 400 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவைவிட அணைக்கு வரும் நீரின் அளவுகுறைவாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் 90.52 அடியிலிருந்து 89.96 அடியாக குறைந்துள்ளது. நீர் இருப்பு 52.60 டிஎம்சியாக உள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து குறைந்து காலை வினாடிக்கு 2,958 கனஅடியாக குறைந்துள்ளது. அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவைவிட அணைக்கு வரும் நீரின் அளவு குறைவாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 91.28 அடியிலிருந்து 90.78 அடியாக குறைந்துள்ளது. நீர் இருப்பு 53.54 டிஎம்சியாக இருந்தது.

# 'அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர் திரைப்படத்திற்கான ஐமேக்ஸ், மார்வெல் ஸ்டுடியோஸின் இன்ஃபினிட்டி விஷன் உள்ளிட்ட பிரீமியம் திரையிடலுக்கான முன்பதிவு தொடங்கியது! மேலும், ரசிகர்களுக்கு 'அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டே' படத்தின் பிரத்யேக காட்சியும் திரையிடப்படும்!



சென்னை 12, செப்டம்பர் 2026: மார்வெல் ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் 'அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர்' திரைப்படத்திற்கான முன்பதிவு ஐமேக்ஸ், மார்வெல் ஸ்டுடியோஸின் இன்ஃபினிட்டி விஷன் உள்ளிட்ட 4டிஎக்ஸ், எம்எக்ஸ்4டி, ஸ்க்ரீன் எக்ஸ், டால்பி விஷன், ஆச்டிஆர் பார்கோ, ஐசிஇ போன்ற பிரீமியம் திரையிடல் வடிவங்களில் வெளியாகவுள்ளது.

செப்டம்பர் 25 அன்று திரையரங்குகளில் வெளியாகும் இப்படம், ஆங்கிலம், இந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் மீண்டும் இந்திய திரையரங்கு களுக்கு வருகிறது.

'அவெஞ்சர்ஸ்: எண்ட்கேம்' திரைப்படத்தை மீண்டும் பெரிய திரையில் ரசிகர்கள் அனுபவிக்க இந்த வெளியீடு வாய்ப்பளிக்கிறது. மேலும், மிகவும் எதிர்பார்க்கப்படும் 'அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டே' திரைப் படத்தின் பிரத்யேக காட்சியும் இதில் இடம் பெறுகிறது. 'அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டே' திரைப்படம் டிசம்பர் 18ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

'அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர்' திரைப்படத்தை பிரம்மாண்டமாக அனுபவிக்க விரும்பும் ரசிகர்களுக்காக, இப்படம் ஐமேக்ஸ், மார்வெல் ஸ்டுடியோஸின் இன்ஃபினிட்டி விஷன் மற்றும் பல்வேறு பிரீமியம் லார்ஜ் ஃபார்மட் திரையிடல்களில் வெளியாகிறது. இன்ஃபினிட்டி விஷன் சான்றிதழ் பெற்ற திரையரங்குகள், பெரிய திரைகள், அதிக ஒளிர்வு கொண்ட காட்சிகள் மற்றும் சிறப்பான ஒலி அமைப்பு மூலம் ரசிகர்களுக்கு உயர்தரமான சினிமா அனுபவத்தை வழங்குகின்றன.

'அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர்' திரைப்படத்தில், பேரழிவை ஏற்படுத்திய சம்பவங்களால் உலக மக்கள் தொகையில் பாதி பேர் அழிந்துவிட்ட நிலையில், மீதமுள்ள சூப்பர் ஹீரோக்கள் அந்த இழப்பிலிருந்து மீண்டு, தங்கள் வாழ்க்கையைத் தொடரப் போராடுகின்றனர். இறுதியில், உலகில் மீண்டும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், தங்கள் அன்புக்குரியவர்களை மீட்டெடுக்கவும் அவர்கள் ஒன்றிணைய வேண்டிய சூழல் உருவாகிறது. இதற்காக அவர்கள் தானோஸூக்கு எதிரான பிரம்மாண்டமான இறுதிப் போரில் களமிறங்குகின்றனர்.

இப்படத்தை கெவின் ஃபெஜ் தயாரித்துள்ளார். ஆண்டனி ருஸோ மற்றும் ஜோ ருஸோ இயக்கியுள்ளனர். லூயிஸ் டி'எஸ்போசிட்டோ, விக்டோரியா அலோன்சா, மைக்கேல் கிரில்லோ, டிரின் ட்ரான், ஜான் ஃபேவ்ரோ, ஜேம்ஸ் கன் மற்றும் ஸ்டான் லீ ஆகியோர் நிர்வாகத் தயாரிப்பாளர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

மார்வெல் ஸ்டுடியோஸின் 'அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர்' திரைப்படம் ஐமேக்ஸ், மார்வெல் ஸ்டுடியோஸின் இன்ஃபினிட்டி விஷன், 4டிஎக்ஸ், எம்எக்ஸ்4டி, ஸ்க்ரீன் எக்ஸ், டால்பி விஷன், ஆச்டிஆர் பார்கோ, மற்றும் ஐசிஇ உள்ளிட்ட பிரீமியம் திரையிடல் வடிவங்களில், ஆங்கிலம், இந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் செப்டம்பர் 25 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

# தமிழ்நாட்டில் தையல் கலைத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் கிராமப்புறப் பெண்களுக்கு டால்மியா பாரத் அறக்கட்டளை அதிகாரமளிக்கிறது



திருச்சி, 12 செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி சிமெண்ட் நிறுவனங்களில் ஒன்றான டால்மியா பாரத் லிமிடெட் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் பிரிவான டால்மியா பாரத் அறக்கட்டளை (டிபிஎஃப்), அதன் கிராம பரிவர்தன் முயற்சியின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள அரியலூர் மற்றும் டால்மியாபுரத்தில் கிராமப்புற பெண் களுக்கான தையல் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கியது. தையல் தொழில் ஒரு சாத்திய மான வாழ்வாதாரமாக அடையாளம் காணப் பட்டுள்ளது, இது நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது, குறிப்பாக வீட்டிலிருந்து வேலை செய்ய விரும்பும் அல்லது தங்கள் சமூகங் களுக்குள் சிறிய அளவிலான நிறுவனங்களை நிறுவ விரும்பும் பெண்களுக்கு அரியலூரில், தாமரிகுளம் கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்கான சமூதாயத் தலைவர்கள் முன்னிலையில், நிகழ்ச்சியை பிரிவுத் தலைவர் திரு. பிரியா ரஞ்சன், ஆலை மனிதவளத் தலைவர் திரு.வீரபாண்டியன் பி. டால்மியா புரத்தில், மகளிர் திறன் தையல் மையத்தை திரு. மகேந்திர குமார் கே, ஜிஎம் - லாஜிஸ்டிக்ஸ், டால்மியாபுரத்தில் சமூகத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் திறந்து வைத்தார்.

இவ்விரு இடங்களிலும் தலா 50 பெண் பங்கேற்பாளர்களுடன் இந்த முன்னெடுப்பு தொடங்கப்பட்டது; மார்ச் 31, 2027-க்குள் ஒவ்வொரு இடத்திலும் 100 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இந்த முன்னெடுப்பு குறித்துப் பேசிய டால்மியாபுரத்தின் பிரிவுத் தலைவர் திரு. கே. விநாயகம்மூர்த்தி அவர்கள், "நிலையான சமூக மேம்பாட்டில் பெண்களின் பொருளாதார அதிகாரமளித்தல் ஒரு முக்கிய தூணாகத் திகழ்கிறது என்று டால்மியா பாரத் நிறுவனம் நம்புகிறது. பெண்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பது, அவர்களின் குடும்ப வருமானத்தை வலுப்படுத்துவதோடு, அவர்களுக்கு அதிக தன்னம்பிக்கையையும் சுயசார்பையும் அளிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. தையல் பயிற்சித் திட்டம் போன்ற முன்னெடுப்புகள் மூலம், அப்பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய நடைமுறைத் திறன்களை வழங்க நாங்கள் இலக்கு கொண்டுள்ளோம்" என்று கூறினார்.

அரியலூர் டிசிபிஎல்-இன் பிரிவுத் தலைவர் திரு. பிரியா ரஞ்சன் மேலும் கூறியதாவது: "கிராமப்புறப் பெண்களுக்கு எளிதில் அணுகக்கூடிய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவது, வலுவான மற்றும் மீள்திறன் கொண்ட சமூகங்களை கட்டமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பெண்களுக்குத் தையல் கலைப் பயிற்சியை அளிப்பதன் மூலம், அவர்கள் சுயதொழில் மேற்கொள்ளவும், வீட்டிலிருந்தே வருமானம் ஈட்டவும், தங்கள் குடும்ப வருமானத்திற்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்கவும் வழிவகுப்பதே எங்கள் நோக்கமாகும்".